கடலாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்(முகூபொ) செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திருமதி. முனைவர். க. விமலா, எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பி.எச்.டி., எம்.பி.ஏ.,

ந.க.எண். 559/அ2/2025 நாள்: 16.07.2025

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டுக்கான தெரிவு – நேரடி நியமனம் - திரு. மு. குமரசக்தி, என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்வது – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: 35681/பி1/2023 நாள்: 23.11.2023
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதம் ந.க.எண்: 1926/PSD-D2/2023 நாள்: 04.09.2023
3. கடலாடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள். ந.க.எண்: 682/அ1/2023 நாள்: 24.11.2023
4. கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 42444/பி1/2024 நாள்: 16.12.2024
5. கடலாடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 63/அ2/2025 நாள்: 24.02.2025
6. சென்னை-15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: TNDCE/4777/2025-B1 நாள்: 26.06.2025

*****************

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டுக்கான தொகுதி –IV மூலம் தெரிவு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணிபுரிய பார்வை-2ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதத்தின் மூலம் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை -1ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறையின்படி இக்கல்லூரிக்கு பணி நியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பார்வை-3ல் காணும் கடலாடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முதல்வர் அவர்களின் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டதையடுத்து திரு. மு. குமரசக்தி, என்பவர் இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக 01.12.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலும் பார்வை-2ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதத்தில் (வரிசை எண்: 9ல்) குறிப்பிட்டுள்ள திரு. மு. குமரசக்தி Conditional PSTM ஒதுக்கீட்டின்படி, தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்து. மற்றும் பார்வை-4ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க தமிழ்வழியில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை

படித்ததற்கான உண்மைத்தன்மைப் பெறப்பட்டு பார்வை-5ல் காணும் கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டது

பார்வை-5ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவுத்துள்ளவாறு திரு. மு. குமரசக்தி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 01.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் இப்பணிவரன் முறை தொகுதி IV (2022-2023) பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்பாணைக்குட்ப்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையில் இவ்வாணை வழங்கப்படுகிறது.

ஒ.-ம்/ 16/07/25

(முதல்வர் (முகூபொ)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கடலாடி

பெறுநர்:

ஒ.வீ
16.07.2025

திரு. மு. குமரசக்தி,
இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கடலாடி- 623 703

நகல்:
1. கல்லூரிக் கல்வி ஆணையர், கல்லூரிக் கல்வி இயக்ககம், 577 அண்ணாசாலை, சைதாப்பேட்டை சென்னை – 600015 (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், மதுரை மண்டலம், மதுரை (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)